
# திராவிடத்தால் வாழ்கிறோம்

959

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

127

தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த மிசா சி.இராமநாதன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.

# மிசா சி.இராமநாதன்; தடம் மாறா கொள்கைக்காரர்!




1976-ஆம் ஆண்டு, மிசா நெருக்கடி நேரம். கழக ஆட்சி கலைக்கப்பட்டு, கழகத்தினர் கொத்துக்கொத்தாக கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டபோது, கழகத்தினர் குடும்பங்களைச் சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக பயணத்தைத் திட்டமிட்டார் கலைஞர். திட்டமிட்ட பயணம் தடைபட்டாலும், மாவட்ட நிகழ்ச்சிகள் என்கிற பெயரிலான பல பயணங்களில் 'மிசா கழகத்தினர்' இல்லங்களில் உணவருந்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் சொல்வதைப் பெரும் அரசியல் நிகழ்வாக மாற்றி இருந்தார் கலைஞர்.

அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டப் பயணத்தில், அறந்தாங்கியில் அவர் ஆறுதல் சொன்ன குடும்பங்களில் ஒன்று ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளர் சி.இராமநாதன் குடும்பம். இராமநாதன் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவரது குடும்பத்துக்கு, தலைவர் தந்த ஆறுதல், இன்றும் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் வரலாறு. இராமநாதன் சிறையில் காட்டிய உறுதியே, அவரது கொள்கைப் பற்றின் வரலாறு.

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், இன்றைய புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், மாவடிக் கோட்டை என்கிற கிராமத்தில் 1943-ஆம் ஆண்டு ஜனவரி ஒன்றாம் தேதி பிறந்தவர் இராமநாதன். பெற்றோர் சின்னு - சண்முகமணி.

### கல்லூரிகளில் கழகப் பணி!

பள்ளிப் பருவத்திலேயே கழக அரசியலின் பக்கம் ஈர்க்கப்பட்டார். 1960 காலகட்டங்களில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்ற தொடங்கிய சி.இராமநாதன், ஆவுடையார்கோவில் மற்றும் அறந்தாங்கியில் பள்ளிப் படிப்பையும், காரைக்குடி அழகப்பா கல்லூரியில் பட்டப் படிப்பையும், சென்னை சட்டக் கல்லூரியில் சட்டப் படிப்பையும் பயின்றார்.

அழகப்பா கல்லூரியில் படித்த காலத்தில், மாணவர் பேரவைத் தலைவராக இருந்த இராமநாதன், அப்பகுதியில் உள்ள கல்லூரிகளில் படித்த மாணவர்களை இணைத்து, மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்தினை உருவாக்கி, அதன் செயலாளராகச் செயல்பட்டவர். 1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அழகப்பா கல்லூரியில் மாணவர் போராட்டங்களை ஒருங்கிணைத்தவர்களில் ஒருவராக இருந்தார்.

1968-69 ஆம் ஆண்டில், சென்னை சட்டக் கல்லூரியில் பயின்ற காலத்தில், கல்லூரியின் தமிழ் மன்றச் செயலாளராக இருந்த போதுதான், சட்டக் கல்லூரி வளாகத்தில் பேரறிஞர் அண்ணா சிலை நிறுவப்பட்டது.

1965-ஆம் ஆண்டில் , கல்லூரி முடித்திருந்த நேரத்தில், அப்போது நடைபெற்ற ஊராட்சித் தேர்தலில் ஆவுடையார்கோவில் ஒன்றியம், பூவலூர் ஊராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ச்சியாக, 13 ஆண்டுகள் அந்தப் பொறுப்பினை வகித்தவர். அதேகாலகட்டத்தில்தான் சட்டக் கல்வியை முடித்ததுடன், ஆவுடையார் கோவில் ஒன்றியக் குழு உறுப்பினராகவும் தேர்வானவர்.

### களப்பணிப் பொறுப்புகள்!

வழக்கறிஞராக பணியாற்றிக் கொண்டே, கழகச் செயல்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுவந்த இராமநாதன் அறந்தாங்கி, ஆவணம், ஆவுடையார்கோயில் புதுக்கோட்டை, காரைக்குடி என சுற்றுவட்டாரப் பகுதிகளில் கழக முன்னோடிகளுடன் இணைந்து களப் பணியாற்றியவர். அறந்தாங்கி சுற்றுவட்டாரப் பகுதிகளில் இவரது கழகப் பணிகளே, 1974-ஆம் ஆண்டில் ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளராக இவரைத் தேர்ந்தெடுக்க வைத்தது. தொடர்ந்து ஐந்து முறை அந்தப் பொறுப்பில் இருந்தார் இராமநாதன்.

அறந்தாங்கி கூட்டுறவு விற்பனைச் சங்கம், ஆவுடையார்கோவில் வட்ட வீட்டு வசதி சங்கங்களின் தலைவராகவும் பொறுப்புகளை வகித்துள்ளார். கழகத்தின் ஒன்றியச் செயலாளர் பொறுப்புக்குப் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தலைமைக் கழக சட்டத் திருத்தக்குழு உறுப்பினராகவும் தொடர்ந்தார்.

> "கழகத் தடம் மாறாமல் பயணித்த அவரைப் பெருமைப்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு கழகத்தின் பவளவிழா, முப்பெரும் விருதுகளில் 'அண்ணா விருது' வழங்கி சிறப்பு சேர்த்தார் கழகத் தலைவர்."

கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றத் தொடங்கிய காலம் தொட்டு, தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றவர். இந்தி எதிர்ப்புக் களத்தில் தொடங்கிய சிறைப்பயணம், பல போராட்டங்களிலும் தொடர்ந்தது.

1976-ஆம் ஆண்டு நெருக்கடி காலத்தில் மிசா கைதியாக ஓராண்டு காலம் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இவரது சகோதரர் மாவட்டத் துணைச் செயலாளராக இருந்த சி.அம்பிகாபதி அவர்களும் 45 நாட்கள் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

### சிறைக்குள் பட்டிமன்றம்

மிசா சிறைச்சாலையை ,கழகப் பல்கலைக் கழகமாக மாற்றியவர்கள் கழகத்தினர். மிசா இராமநாதன் அவர்களின் தலைமையில்தான் சிறைக்குள் பட்டிமன்றம் நடக்கும். அன்று, மிசா கைதியாக இராமநாதன் அவர்களுடன் சிறையைப் பகிர்ந்து கொண்டவர் அப்போது மாணவர் அணியின் அமைப்பாளராக தீவிரமாகச் செயல்பட்டு வந்த, இன்றைய துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா அவர்கள். தனது மிசா சிறைக் கொடுமை அனுபவங்களைக் குறிப்பிடுகையில், "சிறை என்றால் என்னவென்றே தெரியாமல் சிறையில் அடைக்கப்பட்டபோது, என்னைப் பக்கத்தில் படுக்க வைத்து தைரிய ஊக்க மூட்டியவர் இராமநாதன்" என குறிப்பிட்டுள்ளார்.

மிசா கைதியாக சிறையில் இருந்தபோதுதான், கலைஞர் அவர்கள் இவரது இல்லத்திற்குச் சென்று மதிய உணவு உட்கொண்டார் என்பதை அறந்தாங்கி கழகத்தினர் இன்றும் பெருமையுடன் குறிப்பிடுவர்.

மிசா சிறை மீண்ட பின்னர், 1977-ஆம் ஆண்டு கழகம் சந்தித்த தேர்தலில் அறந்தாங்கி சட்டமன்ற வேட்பாளராகும் வாய்ப்பை வழங்கினார் கலைஞர். மும்முனைப் போட்டி நிலவிய அந்தத் தொகுதியில் இராமநாதன் 23 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தார். பின்னர் 1984-ஆம் ஆண்டு தேர்தலிலும் வேட்பாளராகும் வாய்ப்பு வழங்கினார் கலைஞர்.

வழக்கறிஞராக தொ.மு.ச பேரவைச் செயல்பாடுகளில் மிகத் தீவிரமாக ஈடுபட்டவர் இராமநாதன். 1996-ஆம் ஆண்டு முதல் 2001-ஆம் ஆண்டுவரை புதுக்கோட்டை மாவட்ட அரசு பொது வழக்கறிஞராகவும் செயல்பட்டவர் இராமநாதன். தான் வகித்த அனைத்து பொறுப்புகளிலும், கொள்கை உறுதி, கழகத் தடம் மாறாமல் பயணித்த அவரைப் பெருமைப்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு கழகத்தின் பவளவிழா, முப்பெரும் விருதுகளில் 'அண்ணா விருது' வழங்கி சிறப்பு சேர்த்தார் கழகத் தலைவர்.

"நீண்ட கால பொதுவாழ்வுக்குச் சொந்தக் காரர். கழகத் தடம் மாறாத கொள்கைக்காரர்" என புகழப்பட்ட இராமநாதன், வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக 2025 ஜூன் 18-ஆம் தேதி இயற்கை எய்தினார். தலைமைக் கழகத்தின் சார்பில், இரங்கல் கடிதம் எழுதி இருந்தார் கழகத் தலைவர். ஜூன் 21-ஆம் தேதி நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா மற்றும் அமைச்சர்களும், மாவட்டக் கழகத்தினரும் திரண்டு வந்து அவர் நினைவுகளைப் போற்றினர். மாவட்டக் கழகத்தின் வழிகாட்டி, மறையாமல் இருப்பார் மக்கள் நெஞ்சங்களில்.

...துடிக்கும்

## பேச நா இரண்டுடையாய் போற்றி!

வரி விகிதங்களைத் திருத்தம் செய்யும் அதிகாரம், ஜி.எஸ்.டி. கவுன்சிலுக்குத்தான் உள்ளது. அனைத்து மாநிலங்களின் பிரதிநிதிகளும் அதில் அங்கமாக இருக்கிறார்கள். ஆனால், இப்போது விலைக்குறைப்பு லேபிள் ஒட்டும் வேலையை, பா.ஜ.க. தொடங்கியிருக்கிறது. "ஜி.எஸ்.டி. சீர்திருத்தத்தைத் தொடர்ந்து, வாகனங்களின் விலை குறைப்புப் பட்டியலை விற்பனை மையங்களில் சுவரொட்டியாக ஒட்ட வேண்டும். அந்த சுவரொட்டிகளில் மோடியின் படம் இருக்க வேண்டும்" என்று வாகன விற்பனை நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது, ஒன்றிய அரசு.

ஜி.எஸ்.டி.யை அமல்படுத்தியதுதான் பா.ஜ.க. அரசே தவிர, அதில் வரி விகிதங்களை மாற்றும் அதிகாரம் அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கிய ஜி.எஸ்.டி. கவுன்சிலுக்குத்தான் உள்ளது. செப்டம்பர் 3-ஆம் தேதி கூடிய ஜி.எஸ்.டி. கவுன்சிலின் 56-வது கூட்டத்தில், வரி விகிதங்கள் இரண்டு அடுக்குகளாகக் குறைக்கப்பட்டது. பெரும்பாலான உணவுப் பொருட்கள் 12% வரி விகிதத்தில் இருந்து, 5% வரி விகிதத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

ஆனால், ஜி.எஸ்.டி. கவுன்சில் கூடி, முடிவு செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே, ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திர தினத்தன்று பேசிய பிரதமர் மோடி, "ஜி.எஸ்.டி. வரி விகிதம் குறைக்கப்பட இருக்கிறது. நாட்டு மக்களுக்கு இது தீபாவளிப் பரிசு" என்று அறிவித்தார். ஜி.எஸ்.டி. கவுன்சிலின் அதிகார வரம்பை மீறி, பிரதமர் மோடி அறிவித்தது அப்போதே சர்ச்சைகளைக் கிளப்பியது. அதற்கான பதில்தான், லேபிள் ஒட்டும் முயற்சி என்பது இப்போது வெளிப்பட்டுள்ளது.

2017-ஆம் ஆண்டு ஜி.எஸ்.டி. அறிமுகப்படுத்தப்பட்டபோது, பெட்ரோல்- டீசலை மட்டும், ஜி.எஸ்.டி.யில் இணைக்கவில்லை. அதுகுறித்து பொதுமக்களும் எதிர்க்கட்சிகளும் தொடர்ச்சியாக கேள்வி எழுப்பியபோது, "பெட்ரோல் டீசலை ஜி.எஸ்.டி.யில் இணைக்க வேண்டுமா இல்லையா என்பதை ஜி.எஸ்.டி. கவுன்சில்தான் முடிவு செய்ய வேண்டும். ஒன்றிய அரசு தன்னிச்சையாக முடிவு செய்ய முடியாது" என்று கூறியவர் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன். இப்போது வரிக்குறைப்புக்கு மட்டும் பா.ஜ.க. எப்படிக் காரணமாகும் என்ற கேள்வி எழாமல் இல்லை.

## ஃப்ளாஷ்பேக்





சி.வி.திவான்குமார்

### தலைவரிடம் பெற்ற வெற்றிக் கேடயம்!

2009-ஆம் ஆண்டில், தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, அப்போதைய தென் சென்னை மாவட்டக் கழகம் சார்பில், வாலிபால் போட்டி நடைபெற்றது. அதில் முதல்பரிசு வென்று வெற்றிக் கேடயத்தை, அன்றைய துணை முதலமைச்சர், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றபோது எடுத்த படம். அருகில் அன்றைய தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் ஜெ.அன்பழகன். என்றென்றும் கழகத்தில் பயணிக்க, இந்தப் படம் எனக்கு கால ஆவணமாக இருக்கும்.

**- சி.வி.திவான்குமார்,**
**இளைஞர் அணி பகுதி அமைப்பாளர் - மயிலை மேற்கு,**
**தென் சென்னை மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### வங்கிகள் தேசியமயம் தீர்மானம்!

1956-ஆம் ஆண்டு, மே மாதம் திருச்சியில் நான்கு நாட்கள் நடைபெற்ற தி.மு.க. மாநில மாநாட்டில், தொழிற்சாலைகளும் வங்கிகளும் தேசியமயமாக்கப்பட வேண்டும் என தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆயுள் காப்பீடு நிறுவனங்களைத் தேசியமயமாக்கியதை வரவேற்றதுடன், தனியாரிடம் உள்ள இன்றியமையாப் பெருந்தொழிற்சாலைகளையும், வங்கிகளையும் தேசியமயமாக்கி, அந்த நிறுவனங்களின் சொத்துகளையும் வருவாய்களையும் அந்தந்த மாநிலங்களிலேயே பயன்படுத்திக்கொள்ள வேண்டுவது அவசியம் எனவும், அதற்கு ஆவன செய்யவும் அரசை வலியுறுத்தியது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.